DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 470 / 2023
Deposition of PW1-திரு.இளங்கோ (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.09.2025.
எதிரி ஆஜர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். நான் மாத ஓய்வூதியம் பெற்று வருகிறேன். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தினை ஏற்பாடு செய்ய எவ்வளவு காலம் தேவைப்பட்டது என்றால் எப்போதும் என்னிடம் வீட்டில் பணம் இருக்கும். நான் வருமான வரி கணக்கு உள்ளது. நான் வருமான வரி முறையாக செலுத்தி வருகிறேன் என்றால் கணக்கில் இருந்து தானாகவே பிடித்தம் செய்யப்படும். எனது வருமான வரி கணக்கினை தாக்கல் செய்தால் நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.5 லட்சத்திற்கான வரவு செலவு விபரம் தெரியவரும் என்றால் எனக்கு தெரியாது.

2. நான் இந்தியன் வங்கி , பாரத ஸ்டேட் வங்கிகளில் கணக்கு வைத்துள்ளேன். நான் என்னுடைய வங்கி வரவு செலவு கணக்கினை தாக்கல் செய்தால் எதிரிக்கு பணம் கொடுத்த விபரம் தெரியவரும் என்றால் நான் என் கையில் இருந்த பணத்தை தான் கொடுத்தேன். நான் எதிரிக்கு கொடுத்த ரூ.5 லட்சம் எந்த வருமானத்தில் இருந்து வந்தது என்ற விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 15.01.2023 ம் தேதி எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.5 லட்சம் பணம் அன்றைய தேதியில் என் கையில் இருந்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எவ்வித கணக்கிலும் காட்டப்படாதது என்றால் சரியல்ல.

3. நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.5 லட்சத்தில் எத்தனை ரூ.500 நோட்டுகள், ரூ.1000 நோட்டுகள் இருந்தன என்று

சொன்னால் அனைத்தும் ரூ.500 நோட்டுகள் தான். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பண பரிவர்த்தனை செய்யும்போது வருமான வரி சட்டப்படி காசோலை மூலமாகவோ, டி.டி. மூலமாகவோ தான் பரிவர்த்தனை செய்யமுடியும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் அது வங்கிக்கு மட்டும் தான் எனக்கு கிடையாது நான் வீட்டில் இருந்து பணத்தை எடுத்து கொடுத்தேன்.

4. பொதுவாக காசோலையை கலெக்சனுக்கு போடும் போது கவுண்டர் சிலிப் வங்கி மூலமாக கொடுப்பார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் கவுண்டர் சிலிப் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் அதனை வங்கியில் பெற்றுக்கொண்டார்கள் return cheque கொடுத்தார்கள். கவுண்டர் சிலிப்பை பூர்த்தி செய்தது என் நண்பர் ராஜாமணி என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. கவுண்டர் சிலிப்பை தாக்கல் செய்தால் ராஜாமணி யார் என்ற விபரம் தெரியவரும் என்பதால் தான் ராஜாமணியை யார் என்று எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 ல் எந்த தேதியில் தாவா கசோலை கலெக்சன் போட்டப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ல் தாவா கசோலை எண். குறிப்பிடப்பட்டவில்லை என்றால் சரிதான்.

5. ம.சா.ஆ.2 ல் எந்த தேதியில் தாவா கசோலை போதுமான பணம் இல்லை என்று திருப்பப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா கசோலை திருப்பப்பட்டதை மறுநாள் தெரிந்து கொண்டேன். எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அதில் எனக்கும் எதிரிக்கும் எவ்வித அறிமுகமோ பணம் கொடுக்கல் வாங்கலோ இல்லை என்று எதிரி மறுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் ம.சா.ஆ.6 ல் எதிரிக்கும் ராஜாமணி என்பவருக்கும் தான் கொடுக்கல் வாங்கல் இருந்ததாகவும் 2021 ம் வருடம் எதிரி ராஜாமணியிடம் ரூ.2 லட்சம் பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக HDFC வங்கி காசோலை எண்.000073 , 000074 ஆகிய காசோலைகளை கொடுத்ததாகவும் புரோ நோட்டுகளை கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ல் எனக்கும் ராஜாமணிக்கும் பழக்க வழக்கம் இல்லை என்றோ, தாவா காசோலையை பெறவில்லை என்றோ குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் ராஜாமணி யார் என்ற விபரம்

எனக்கு தெரியாது ஆகையால் நான் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது கடந்த 04.12.2024 ம் தேதி இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிரி தரப்பில் எனக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் என்றால் சரிதான். அந்த நோட்டீஸ் எனக்கும் , ராஜாமணி, ராமராசு ஆகியோருக்கு சேர்த்து தான் அனுப்பப்பட்டது என்றால் எனக்கு வந்த விபரம் தெரியும் அவர்களுக்கு அனுப்பினாரா என்று தெரியாது. **மேற்படி நோட்டீஸ் எ.சா.ஆ.1.**

**7.** மேற்படி நோட்டீஸ்க்கு 24.12.2024 ம் தேதியிட்டு எனது வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த பதில் அறிவிப்பில் ராஜாமணிக்கும், எனக்கும் பழக்க வழக்கம் இல்லை என்றும், ராஜாமணியிடம் தாவா காசோலையை பெறவில்லை என்று குறிப்பாக மறுக்வில்லை என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.2.** ராஜாமணி என்பவரை எனது தரப்பில் விசாரணை செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் அவரை எனக்கு யார் என்று தெரியாது ஆகையால் விசாரணை செய்ய அவசியம் இல்லை. ராஜாமணி என்பவர் என் உறவினர் என்பதாலும் அவரை விசாரணை செய்தால் வழக்கின் உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. முன்பின் தெரியாத நபரிடம் எந்த ஆவணங்களும் இல்லாமல் வெறும் காசோலையை வைத்து ரூ.5 லட்சம் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தாவா காசோலையை எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. உண்மையாகவே எதிரி என்னிடம் தாவா காசோலையை கொடுத்திருந்தால் காசோலையில் என்னுடைய பெயரையும், தேதியும் குறிப்பிட்டு எழுதி கொடுத்திருப்பார் என்றால் அவர் ரூ.5 லட்சம் என்பதையும், அவரின் கையொப்பத்தையும் போட்டுதான் கொடுத்தார். ரூ.5 லட்சம் பணம் கொடுக்க எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் காவல் துறையில் பணி புரிந்தவர் என்பதால் எதிரியை மிரட்டி சட்டவிரோதமாக பணம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் சட்டவிரோதமாக ராஜாமணியிடம் இருந்து தாவா காசோலையை பெற்று இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜாமணி அனுப்பிய பதில் அறிவிப்பில் எனக்கும், ராமராசு, இளங்கோ ஆகிய மூவருக்கும் இடையே அடையாளம் தெரிந்தவர்கள் என்ற அடிப்படையில் தொடர்புள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா காசோலை தொகையானது சட்டப்படி நிறைவேற்றத்தக்கக கடன் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**காசோலை தொகையை எதிரி பெறவில்லை என்றால் சரியல்ல. NI Act ன் கீழ் எதிரி குற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல.**

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.09.20 16:40:56 +0530

Judicial Magistrate,
Andipatti.